# வெள்ளகோவில் நகராட்சி, திருப்பூர் மாவட்டம்

## 2018–ம் ஆண்டு ஏப்ரல் மாதம் 27–ம் தேதி நடைபெற்ற சாதாரணக் கூட்டம்
## தீர்மானம் நகல்கள்

**தீர்மானம் எண் : 94 / 2018, நாள் : 27.04.2018**

இந்நகராட்சிக்குக் சொந்தமான மூலனூர் ரோடு கட்டணக் கழிப்பிடத்தில் கட்டணம் வசூலிக்கும் உரிமத்திற்கு 19.04.2018–ந் தேதி ஒப்பந்தப்புள்ளி மற்றும் பொது ஏலம் நடைபெற்றது. இதில் ஒப்பந்தப்புள்ளி எவரும் கோரப்படவில்லை. பொது ஏலத்தில் இரண்டு நபர்கள் மட்டுமே கலந்து கொண்டனர். கலந்து கொண்டவர்களால் கோரப்பட்ட ஏலக்கேள்வித் தொகை விபரம் பின்வருமாறு

| வ.எண் | குத்தகை விபரம் | கலந்து கொண்டவர்கள் விபரம் | அதிகபட்ச ஏலக்கேள்வித் தொகை |
|---|---|---|---|
| 1 | மூலனூர் ரோடு கட்டணக் கழிப்பிடம் | பி. லட்சுமணன், த/பெ. பழனி, 1/57, கோட்டவலசு காலனி, கருப்பணவலசு, சக்திபாளையம், வெள்ளகோவில் | ரூ. 43,600 /– (ஒரு வருடத்திற்கு) |
| | | தங்கம், த/பெ. சந்தானம், 135டி, தேவி நகர், தேவாங்கம், திருப்பரங்குன்றம், மதுரை | ரூ. 43,500 /– (ஒரு வருடத்திற்கு) |

மேற்படி கோரப்பட்ட அதிகபட்ச ஏலக்கேள்வித் தொகையான ஏலகேள்விதாரருக்கு மூலனூர் ரோடு கட்டணக் கழிப்பிடத்தில் கட்டணம் வசூலிக்கும் குத்தகை உரிமத்தை ஒப்படைப்பது குறித்து மன்றத்தின் முடிவிற்கு வைக்கப்படுகிறது.

அலுவலககுறிப்பு

உயர்ந்தபட்ச ஏலகேள்வித் தொகை கோரியவருக்கு குத்தகை உரிமத்தை ஊர்ஜிதம் செய்து வழங்கலாம்.

(கோப்பு எண். 2032 / 2017 / அ3)

**தீர்மானம் – அலுவலககுறிப்பு அனுமதிக்கப்பட்டது**

**தீர்மானம் எண் : 95 / 2018, நாள் : 27.04.2018**

இந்நகராட்சி அலுவலகத்தில் உள்ள பொதுப்பிரிவு, பொறியியல் பிரிவு, சுகாதாரப் பிரிவு மற்றும் வரிவசூல் மையத்தில் உள்ள கணினி பிரிண்டர்களுக்கு டோனர் ரீபில் செய்ய உள்ளூர் விலைப்புள்ளிகள் கோர தீர்மானம் எண். 61 / 2018, நாள். 28.03.2018–ல் அனுமதிக்கப்பட்டுள்ளதால், கீழ்கண்ட கணினி பிரிண்டர்களுக்கு டோனர் ரீபில் செய்ய 04.04.2018–ந் தேதி உள்ளூர் விலைப்புள்ளிகள் கோரப்பட்டதில், பெறப்பட்ட விலைப்புள்ளிகளின் ஒப்புநோக்குப் பட்டியல் விபரம் பின்வருமாறு

| Sl.No. | Printer Model | Veera Computers & Xerox, Vellakovil | Yes for Success, Vellakovil | Balu Printers, Vellakovil |
|---|---|---|---|---|
| 1 | HP laser jet 1536 MFP | 800 | 950 | 900 |
| 2 | HP laser jet P2055d | 800 | 800 | 950 |
| 3 | HP laser jet P202 | 800 | 900 | 850 |
| 4 | HP laser jet 2014 | 800 | 950 | 900 |
| 5 | HP laser jet 1020 | 600 | 700 | 650 |
| 6 | HP laser jet P3015 | 800 | 850 | 850 |
| 7 | HP laser jet M226dn | 800 | 900 | 850 |

| | | | | |
|---|---|---|---|---|
| 8 | HP laser jet M427 fdn | 800 | 950 | 900 |
| | | **6200** | **7000** | **6850** |

மேற்படி வரப்பெற்ற விலைப்புள்ளிகளில் குறைவான விலைப்புள்ளிகள் தெரிவித்துள்ள திரு. வீரா கம்ப்யூட்டர்ஸ் அன் ஜெராக்ஸ் அவர்களின் குறைந்த விலைப்புள்ளியை ஏற்று வேலை உத்தரவு வழங்க மன்றத்தின் அனுமதிக்கு.

அலுவலககுறிப்பு

1) மன்றம் அனுமதிக்கலாம்.
2) அலுவலகப் பணிகளின் அவசர அவசியம் கருதி வேலை உத்தரவு வழங்கியதையும் மன்றம் அங்கீகரிக்கலாம்.

**தீர்மானம் – அலுவலககுறிப்பு அனுமதிக்கப்பட்டது**

**தீர்மானம் எண் : 96 / 2018, நாள் : 27.04.2018**

இந்நகராட்சி அலுவலகத்தில் உள்ள பொதுப்பிரிவு, பொறியியல் பிரிவு, சுகாதாரப் பிரிவு மற்றும் வரிவசூல் மையத்தில் உள்ள கணினிகளுக்கு Anti virus Renewal செய்ய உள்ளூர் விலைப்புள்ளிகள் கோர தீர்மானம் எண். 54 / 2018, நாள். 15.03.2018–ல் அனுமதிக்கப்பட்டுள்ளதால், 04.04.2018–ந் தேதி உள்ளூர் விலைப்புள்ளிகள் கோரப்பட்டதில், பெறப்பட்ட விலைப்புள்ளிகளின் ஒப்புநோக்குப் பட்டியல் விபரம் பின்வருமாறு

| Sl.No. | Antivirus | Qty | Veera Computers & Xerox, Vellakovil | Yes for Success, Vellakovil | Balu Printers, Vellakovil |
|---|---|---|---|---|---|
| 1 | NPAV | 1 No client | 950 | 1000 | 1100 |
| 2 | NPAV | 1 No server | 3500 | 3650 | 3800 |
| | | | **4450** | **4650** | **4900** |

மேற்படி வரப்பெற்ற விலைப்புள்ளிகளில் குறைவான விலைப்புள்ளிகள் தெரிவித்துள்ள திரு. வீரா கம்ப்யூட்டர்ஸ் அன் ஜெராக்ஸ் அவர்களின் குறைந்த விலைப்புள்ளியை ஏற்று வேலை உத்தரவு வழங்க மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

அலுவலககுறிப்பு

மன்றம் அனுமதிக்கலாம்

(ந.க.எண். 105 / 2018 / அ3)

**தீர்மானம் – அலுவலககுறிப்பு அனுமதிக்கப்பட்டது**

**தீர்மானம் எண் : 97 / 2018, நாள் : 27.04.2018**

இந்நகராட்சிக்குட்பட்ட பகுதியில் கீழ்காணும் பணிமேற்கொள்ள 17.04.2018 அன்று ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டதில் வரப்பெற்ற ஒப்பந்தப்புள்ளிகள் விபரம் பின்வருமாறு

| வ. எண் | வேலையின் பெயர் | மதிப்பீடு | ஒப்பந்ததாரர் பெயர் | ஒப்பந்தப்புள்ளி விகிதம் |
|---|---|---|---|---|
| 1 | சலவையாளர் (கா), மு.பழனிச்சாமி நகர், குமாரவலசு ரோடு, ரெட்டிவலசு ரோடு, கல்லாங்காட்டுவலசு ரோடு பகுதியில் புதிய சின்டெக்ஸ் அமைத்தல் | 160000 | வீரா கன்ஸ்ட்ரக்சன் | 4.83 % அதிகம் |
| | | | கங்கனம் கன்ஸ்ட்ரக்சன் | 6.73 % அதிகம் |

அலுவலககுறிப்பு

1) வரப்பெற்ற ஒப்பந்தப்புள்ளிகளை ஏற்கலாம்.

2) வரப்பெற்ற ஒப்பந்தப்புள்ளிகளில் குறைவான மதிப்பீட்டுத் தொகைக்கு ஒப்பந்தப்புள்ளி தெரிவித்த வீரா கன்ஸ்ட்ரக்சன், துரைராமசாமி நகர், ஒப்பந்ததாரரின் ஒப்பந்தப்புள்ளியை ஏற்று வேலை உத்தரவு வழங்க மன்றம் அனுமதிக்கலாம்.

(கோப்பு எண். 094 / 2018 / இ1)

**தீர்மானம் – அலுவலககுறிப்பு அனுமதிக்கப்பட்டது**

**<u>தீர்மானம் எண் : 98 / 2018, நாள் : 27.04.2018</u>**

இந்நகராட்சிக்குட்பட்ட பகுதியில் கீழ்காணும் பணிமேற்கொள்ள 17.04.2018 அன்று ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டதில் வரப்பெற்ற ஒப்பந்தப்புள்ளிகள் விபரம் பின்வருமாறு

| வ. எண் | வேலையின் பெயர் | மதிப்பீடு | ஒப்பந்ததாரர் பெயர் | ஒப்பந்தப்புள்ளி விகிதம் |
|---|---|---|---|---|
| 1 | சலவையாளர் (கா) குடிநீர் தொட்டி மெயின் லைன் விஸ்தரிப்பு செய்தல் | 1000000 | வீரா கன்ஸ்ட்ரக்சன் | 4.88 % அதிகம் |
| | | | கங்கனம் கன்ஸ்ட்ரக்சன் | 5.46 % அதிகம் |

<u>அலுவலககுறிப்பு</u>

1) வரப்பெற்ற ஒப்பந்தப்புள்ளிகளை ஏற்கலாம்.
2) வரப்பெற்ற ஒப்பந்தப்புள்ளிகளில் குறைவான மதிப்பீட்டுத் தொகைக்கு ஒப்பந்தப்புள்ளி தெரிவித்த வீரா கன்ஸ்ட்ரக்சன், துரைராமசாமி நகர், ஒப்பந்ததாரரின் ஒப்பந்தப்புள்ளியை ஏற்று வேலை உத்தரவு வழங்க மன்றம் அனுமதிக்கலாம்.

(கோப்பு எண். 094 / 2018 / இ1)

**தீர்மானம் – அலுவலககுறிப்பு அனுமதிக்கப்பட்டது**

**<u>தீர்மானம் எண் : 99 / 2018, நாள் : 27.04.2018</u>**

இந்நகராட்சிக்குட்பட்ட பகுதியில் கீழ்காணும் பணிமேற்கொள்ள 19.04.2018 அன்று ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டதில் வரப்பெற்ற ஒப்பந்தப்புள்ளிகள் விபரம் பின்வருமாறு

| வ. எண் | வேலையின் பெயர் | மதிப்பீடு | ஒப்பந்ததாரர் பெயர் | ஒப்பந்தப்புள்ளி விகிதம் |
|---|---|---|---|---|
| 1 | நகராட்சி பகுதிகளில் உள்ள கைபம்புகளை பழுது பார்த்தல் | 500000 | வீரா கன்ஸ்ட்ரக்சன் | 4.93 % அதிகம் |
| | | | கங்கனம் கன்ஸ்ட்ரக்சன் | 5.96 % அதிகம் |

<u>அலுவலககுறிப்பு</u>

1) வரப்பெற்ற ஒப்பந்தப்புள்ளிகளை ஏற்கலாம்.
2) வரப்பெற்ற ஒப்பந்தப்புள்ளிகளில் குறைவான மதிப்பீட்டுத் தொகைக்கு ஒப்பந்தப்புள்ளி தெரிவித்த வீரா கன்ஸ்ட்ரக்சன், துரைராமசாமி நகர், ஒப்பந்ததாரரின் ஒப்பந்தப்புள்ளியை ஏற்று வேலை உத்தரவு வழங்க மன்றம் அனுமதிக்கலாம்.

(கோப்பு எண். 094 / 2018 / இ1)

**தீர்மானம் – அலுவலககுறிப்பு அனுமதிக்கப்பட்டது**

**<u>தீர்மானம் எண் : 100 / 2018, நாள் : 27.04.2018</u>**

நகராட்சி நிர்வாக ஆணையர், சென்னை அவர்களின் சுற்றறிக்கை கடிதம் ந.க.எண். 7234 / 2014 / ஆர்1, நாள். 15.03.2018-ல் தெரிவித்துள்ளபடி நகராட்சிக்குட்பட்ட பகுதிகளில் உள்ள தனியார் பள்ளிக் கட்டிடங்களுக்கு சொத்துவரி விதிப்பு செய்ய வெளியிடப்பட்ட சட்ட திருத்த அறிவிக்கையை

தினசரி நாளிதழில் விளம்பரம் செய்யப்பட்டமைக்கு வரப்பெற்ற பட்டியல் தொகை ரூ. 11340 /—ஐ (பட்டியல் எண். TPR1819-0000765, dated. 10.04.2018) தினத்தந்தி நாளிதழ் நிறுவனத்திற்கு வழங்க மன்றத்தின் அனுமதி கோரி வைக்கப்படுகிறது.

<u>அலுவலககுறிப்பு</u>

மன்றம் அனுமதிக்கலாம்.

(கோப்பு எண். 685 / 2018 / அ1)

**தீர்மானம் — அலுவலககுறிப்பு அனுமதிக்கப்பட்டது**

**<u>தீர்மானம் எண் : 101 / 2018, நாள் : 27.04.2018</u>**

இந்நகராட்சிக்குச் சொந்தமான மூன்று வருட குத்தகை இனங்களான பேருந்து நிலைய நுழைவு கட்டணம்,பேருந்து நிலைய கட்டண கழிப்பிடம், இந்திராநகர் கட்டணக் கழிப்பிடம் மற்றும் மூலனூர் ரோடு கட்டணக் கழிப்பிடம் ஆகிய இனங்களுக்கு 23.03.2018—ல் ஏலம் மற்றும் ஒப்பந்தப்புள்ளி அறிவிப்பு விளம்பரம் தினசரி நாளிதழில் விளம்பரம் செய்து தரக்கோரி மாவட்ட செய்தி மற்றும் மக்கள் தொடர்பு அலுவலர், திருப்பூர் அவர்களுக்கு கடிதம் அனுப்பப்பட்டதில் மாவட்ட செய்தி மற்றும் மக்கள் தொடர்பு அலுவலர், திருப்பூர் அவர்களின் வெ.ஆணை எண். 63 / 2018 / செ.ம.தொ / 2018, நாள். 09.03.2018—ன்படி தினமணி, தினசரிநாளிதழில் கோவை பதிப்பில் 10.03.2018—ல் வெளிவந்தமைக்கு Bright Advertisting Bill No. 3698 / Che / 2016-17, நாள். 10.03.2018—ல் விளம்பர செலவின பட்டியல் தொகை ரூ. 19,354 /— வழங்க கோரப்பட்டுள்ளது. மேற்படி பட்டியல் தொகை வழங்க மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது. இச்செலவினத்தை பொது நிதியில் மேற்கொள்ளலாம்.

<u>அலுவலககுறிப்பு</u>

மன்றம் அனுமதிக்கலாம்.

(கோப்பு எண். 2032 / 2017 / அ2)

**தீர்மானம் — அலுவலககுறிப்பு அனுமதிக்கப்பட்டது**

**<u>தீர்மானம் எண் : 102 / 2018, நாள் : 27.04.2018</u>**

இந்நகராட்சிக்குச் சொந்தமான ஒன்பது ஆண்டு குத்தகை இனங்களான பேருந்து நிலைய கடை எண். 4 மற்றும் 8, வாரச்சந்தை முகப்பு கடை எண். 4,7,8 மற்றும் 10, தீத்தாம்பாளையம் வணிக வளாகக் கடை எண். 1,2,3 மற்றும் 4 ஆகிய இனங்களுக்கு 28.03.2018—ல் ஏலம் மற்றும் ஒப்பந்தப்புள்ளி அறிவிப்பு விளம்பரம் மாவட்ட செய்தி மக்கள் தொடர்பு அலுவலர், திருப்பூர் அவர்களின் வெ.ஆணை எண். 68 / 2018 / செ.ம.தொ / 2018, நாள். 15.03.2018—ன்படி தினமணி, தினசரி நாளிதழ் கோவை பதிப்பில் 16.03.2018—ல் பக்கம் எண். 07—ல் வெளிவந்தமைக்கு பட்டியல் தொகை ரூ. 24,424 /— கிராபிக் ஆர்ட்ஸ் இண்டஸ்ட்ரீஸ் நிறுவனத்திற்கு வழங்கக் கோரப்பட்டுள்ளது. எனவே மேற்படி தொகை வழங்க மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது. மேற்படி செலவினத்தை பொது நிதியில் மேற்கொள்ளலாம்.

<u>அலுவலககுறிப்பு</u>

மன்றம் அனுமதிக்கலாம்.

(கோப்பு எண். 2032 / 2017 / அ2)

**தீர்மானம் — அலுவலககுறிப்பு அனுமதிக்கப்பட்டது**

**<u>தீர்மானம் எண் : 103 / 2018, நாள் : 27.04.2018</u>**

வெள்ளகோவில் நகராட்சியில் தூய்மை இந்தியா திட்டம் — திடக்கழிவு மேலாண்மை திட்டம் 2017-18ன் கீழ் கீழ்காணும் பணிகள் மேற்கொள்ள உத்தேசிக்கப்பட்டு மதிப்பீடுகள் தயார் செய்யப்பட்டுள்ளது.

| வ.எண். | வேலையின் பெயர் | மதிப்பீடு ரூபாய் இலட்சத்தில் |
|---|---|---|
| 1 | வார்டு எண். 6 சந்தை வளாக பகுதியில் சிறு உரக்கிடங்கு அமைக்கும் பணி | 36.80 |
| 2 | நகராட்சி வார்டு எண். 20, எல். கே. சி நகர் பகுதியில் சிறு உரக்கிடங்கு அமைக்கும் பணி | 36.80 |

| | | |
|---|---|---|
| 3 | வார்டு எண். 6, சந்தை வளாகம் மற்றும் வார்டு எண். 20, எல். கே. சி பகுதியில் அமைக்கும் சிறு உரக்கிடங்கு உபயோகத்திற்கு மின்சார பேட்டரியால் இயங்கும் 11 வாகனங்கள் வாங்கும் பணி | 20.40 |
| | **மொத்தம்** | **94.00** |

மேற்படி பணிகளை மேற்கொள்ள நிதி ஒதுக்கீடு செய்யவும், நிர்வாக அனுமதி வேண்டியும் நகராட்சிகள் நிர்வாக ஆணையர் அவர்களுக்கு கருத்துரு சமர்ப்பிக்க மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

<u>அலுவலககுறிப்பு</u>

மன்றம் அங்கீகரிக்கலாம்.

(கோப்பு எண். 816/2018/E1)

**தீர்மானம் – அலுவலககுறிப்பு அனுமதிக்கப்பட்டது**

**<u>தீர்மானம் எண் : 104 / 2018, நாள் : 27.04.2018</u>**

இந்நகராட்சி பகுதிகளில் தார்சாலைகள் மற்றும் மண்சாலைகள் சேதமடைந்த நிலையில் உள்ளதால் பொதுமக்கள் போக்குவரத்திற்கு மிகவும் சிரமப்படுகிறார்கள். எனவே கீழ்காணும் விபரப்படி சாலைகளை அபிவிருத்திப் பணிகள் மேற்கொள்ள வேண்டியுள்ளது.

| வ. எண் | வேலையின் பெயர் | நீளம் (கி.மீ) | அகலம் (மீ) | மதிப்பீடு (இலட்சத்தில்) |
|---|---|---|---|---|
| 1 | நடேசன் நகர், சொரியங்கிணத்துப்பளையம் (ஆ.தி) காலணி, எல். கே. சி நகர், வள்ளியரச்சல் ரோடு மற்றும் இந்திரா நகர் பகுதிகளில் தார்சாலை சீரமைத்தல். கரட்டுப்பாளையம் முதல் கணபதிபாளையம் ரோடு வரை செல்லும் மண்சாலையை தார்சாலையாக மாற்றியமைத்தல் | 4.95 | 4.50 & 5.00 | 200.00 |
| 2 | அகலரைப்பாளையம் புதுார், தீத்தாம்பாளையம், மு. பழனிச்சாமி நகர், ராஜீவ் நகர், மூலனூர் ரோடு, திருவள்ளுவர் நகர், உப்புப்பாளையம் ரோடு பகுதிகளில் தார்சாலை சீரமைத்தல். காடையூரான்வலசு முதல் எல்.கே. சி நகர் வரை உள்ள மண்சாலையை தார்சாலையாக மாற்றியமைத்தல் | 5.25 | 4.50 & 5.00 | 200.00 |
| 3 | புள்ளசெல்லிபாளையம், சிவநாதபுரம், கல்லாங்காட்டு வலசுரோடு, உப்புப்பாளையம், செம்மாண்டம்பாளையம், கரட்டுப்பாளையம் குறுக்கு வீதிகள், குறுக்கபாளையம் ரோடு பகுதிகளில் தார்சாலை சீரமைத்தல் | 2.85 | 4.50 | 100.00 |
| | | **மொத்தம்** | | **ரூ. 500.00** |

மேற்படி பராமரிப்பு பணிகளை அவசியமாக மேற்கொள்ள வேண்டியுள்ளதால் மேற்படி பணிகளை 2018-19 தமிழ்நாடு நகர்புறச்சாலை அபிவிருத்தி திட்டத்தின்கீழ் (TURIP– 2018-19) மேற்கொள்ள நிர்வாக அனுமதி வேண்டி கருத்துரு சமர்பிக்க மன்றத்தின் அனுமதிக்கு,

<u>அலுவலகக்குறிப்பு</u>

மன்றம் அனுமதிக்கலாம்.

(கோப்பு எண். 989/2017/இ1)

**தீர்மானம் – அலுவலககுறிப்பு அனுமதிக்கப்பட்டது**

**<u>தீர்மானம் எண் : 105 / 2018, நாள் : 27.04.2018</u>**

இந்நகராட்சிக்குட்பட்ட பகுதிகளில் கீழ்கண்டுள்ள விபரப்படி குடிநீர் திட்டம் மற்றும் சிறுமின்விசைபம்பு திட்டங்களில் பணிகள் மேற்கொள்ளப்பட வேண்டியுள்ளது.

1) காந்திநகர் சிறுமின்விசைபம்பு திட்ட GI விநியோகக் குழாய்கள் பழுதடைந்துள்ளதை மாற்றியமைத்தல்.
2) கா.ப.சி.நகர் தெற்கு பகுதியில் அமைக்கப்பட்டுள்ள ஆழ்குழாய் கிணற்றில் பொருத்தப்பட்டுள்ள நீர்மூழ்கி மின்மோட்டார் மிகவும் பழுதடைந்துள்ளதால் இதற்கு பதிலாக புதிய மின்மோட்டார் பொருத்துதல்.
3) ஸ்ரீராம் நகர், தாராபுரம் ரோடு, சேரன் நகர், அகலரப்பாளையம்புதூர் ரோடு ஆழ்குழாய் கிணறுகளில் வேர்கள், சேறுசகதிகள் உள்ளதால் Re-bore செய்ய வேண்டியுள்ளது.
4) புதுக்காடு – அரண்மனைதுரை வீடு பின்புறம், செம்மாண்டம்பாளையம், இந்திராநகர், செம்மாண்டம்பாளையம் ரோடு மேல்புறம் (40 அடி ரோடு) பகுதிகளில் அமைக்கப்பட்டுள்ள தண்ணீர் தொட்டிகள் உடைந்துள்ளது. இதனை அகற்றிவிட்டு புதிய தொட்டிகள் பொருத்தப்பட வேண்டும்.
5) கீழ்காணும் சிறுமின்விசைபம்பு திட்டங்களில் HDPE HOSE PIPE மாற்றப்பட வேண்டும்.
    1) கல்லாங்காட்டுவலசு, 2) திருவள்ளுவர் நகர், 3) நடேசன் நகர் (மேல்நிலைத் தொட்டி அருகில்), 4) மூலனூர் ரோடு (மாகாளியம்மன்கோவில் வீதி), 5) தண்ணீர்பந்தல் (என்.என்.பட்டி ரோடு), 6) தண்ணீர்பந்தல் (பள்ளங்கிணறு ரோடு), 7) அகலரப்பாளையம்புதூர் (காமாட்சியம்மன்கோவில் அருகில்), 8) அகலரப்பாளையம்புதூர் (அ), 9) உப்புப்பாளையம் ரோடு நூலகம் அருகில், 10) தாராபுரம் ரோடு (மேல்நிலைத் தொட்டி அருகில்), 11) திருவள்ளுவர் நகர் (குறிஞ்சி பள்ளி அருகில்), 12) கணபதிபாளையம்

மேற்படி குடிநீர் திட்டப்பணிகள் அவசியமாக மேற்கொள்ள வேண்டியுள்ளது. எனவே இதற்காக தயாரிக்கப்பட்ட உத்தேச மதிப்பீடு ரூ. 7,80,000 /–க்கு மன்றத்தின் அனுமதி கோரி வைக்கப்படுகிறது.

<u>அலுவலககுறிப்பு</u>

மன்றம் அனுமதிக்கலாம்.

(கோப்பு எண். / 2018 / இ1)

**தீர்மானம் – அலுவலககுறிப்பு அனுமதிக்கப்பட்டது**

**<u>தீர்மானம் எண் : 106 / 2018, நாள் : 27.04.2018</u>**

வெள்ளகோவில் நகராட்சி குடிநீர் திட்டத்தில் கீழ்கண்டுள்ள விபரப்படி பராமரிப்பு பணிகள் மற்றும் அபிவிருத்தி பணிகள் மேற்கொள்ளப்பட்ட வேண்டியுள்ளது.

1) சிவநாதபுரம் மேல்நிலைத்தொட்டியில் பழுதடைந்த குழாய்களை மாற்றிவிட்டு புதியதாக கேட்வால்வு பொருத்துதல்.
2) செம்மாண்டம்பாளையம், அம்மன் கோவில் வீதி பகுதிகளில் குழாய் மாற்றியமைத்தல்.
3) இந்திரா நகர் காலனி பகுதியில் GI Pine அமைத்தல்.
4) செம்மாண்டம்பாளையம் ரோடு மதுராம்பிகா ஸ்பின்னிங் மில் அருகில் குடிநீர் குழாய் இணைப்பு வேலைகள் செய்தல்.
5) செங்காளிபாளையம் ரோடு பகுதியில் குடிநீர் குழாய் இணைப்பு வேலைகள் செய்தல்.
6) நகராட்சி அலுவலக வளாகத்தில் 6 inch Sulicvalue பழுதடைந்ததை அகற்றிவிட்டு புதிய Sulicvalue பொருத்துதல்.
7) காடையூரான்வலசு கந்தசாமி வீடு அருகில், உப்புப்பாளையம்ரோடு முத்துக்குமார் நகர் மேற்கு வீதியில் புதிய PVC வாட்டர் டேங் அமைத்தல்.
8) இந்திரா நகர் மற்றும் சேரன் நகர் பகுதியில் அமைக்கப்பட்டுள்ள சிறுமின்விசைப்பம்பு திட்டங்களின் மின் இணைப்பு ஒயர்கள் பழுடைந்துள்ளதை அகற்றிவிட்டு புதியதாக மின் ஒயர்கள் பொருத்துதல்.
9) இராஜீவ் நகர் முருகேசன் வீடு அருகில் குழாய் விஸ்தரிப்பு செய்தல்.
10) கே.பி.சி நகர் ஆனந்தன் வீடு அருகில் குழாய் விஸ்தரிப்பு செய்தல்.
11) சொரியங்கிணத்துப்பாளையம் (அ) காலணி கிழபுறம் சர்வாலையம் அருகில் ஏற்கனவே அமைக்கப்பட்டுள்ள ஆழ்குழாய் கிணற்றில் மின் மோட்டார் பொருத்தி தண்ணீர் வசதிகள் செய்தல்.

மேற்படி பணிகள் பொதுமக்கள் நலன் கருதியும் பணியின் அவசர அவசியம் கருதியும் உடன் மேற்கொள்ள வேண்டியுள்ளது. இதற்கான உத்தேச மதிப்பீடு ரூ.5,30,000/– ஆகும். பணியினை மேற்கொள்ள மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

<u>அலுவலக குறிப்பு</u>

மன்றம் அங்கீகரிக்கலாம்.

(கோப்பு எண்.94/2018/இ1)

**தீர்மானம் – அலுவலககுறிப்பு அனுமதிக்கப்பட்டது**

**<u>தீர்மானம் எண் : 107 / 2018, நாள் : 27.04.2018</u>**

இந்நகராட்சிக்குப்பட்ட அனைத்து வார்டுகளிலும் பொது சுகாதாரப் பணிகள் மேற்கொள்ள 62 நபர்கள் சப்ளை செய்தல் பணிக்கு 18.04.2018–ல் ஒப்பந்தப்புள்ளி அறிவிப்பு மாநில அளவில் விளம்பரம் செய்யப்பட்டமைக்கான பட்டியல் தொகை ரூ. 72,188 /–ஐ (பட்டியல் எண். RPS / 17 – 18 / 1643, dated. 24.03.2018) வழங்கக் கேட்டு வரப்பெற்ற Ravi publicity Service, Chennai அவர்களின் கடிதம் மன்றத்தின் பார்வைக்கு வைக்கப்படுகிறது. மேற்படி நிறுவனத்திற்கு தொகை ரூ. 72,188 /– வழங்க மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

<u>அலுவலககுறிப்பு</u>

மன்றம் பார்வையிட்டு அனுமதி வழங்கலாம்.

(கோப்பு எண். 405 / 2018 / எச்1)

**தீர்மானம் – அலுவலககுறிப்பு அனுமதிக்கப்பட்டது**

**<u>தீர்மானம் எண் : 108 / 2018, நாள் : 27.04.2018</u>**

நகராட்சி நிர்வாக ஆணையர், சென்னை அவர்களின் கடிதம் ந.க.எண். 47795 / பி3 / 2013, நாள். 31.12.2013–ன்படி இந்நகராட்சிக்குட்பட்ட பகுதிகளில் பொது சுகாதாரப்பணிகள் மேற்கொள்ள நிரந்தரப்பணியாளர்கள் குறைவாக உள்ளதால், நிர்வாக நலன் கருதி தனியார் மூலம் பணியாளர்கள் நியமித்து பணிகள் மேற்கொள்ள அனுமதிக்கப்பட்டுள்ளதால், 2018–19–ம் ஆண்டுக்கு பொதுசுகாதாரப்பணிகள் மேற்கொள்ள 18.04.2018 அன்று ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டதில் வரப்பெற்ற ஒப்பந்தப்புள்ளிகள் விபரம் பின்வருமாறு

| வ. எண் | வேலையின் பெயர் | மதிப்பீட்டுத் தொகை | நகராட்சியால் நிர்ணயம் செய்யப்பட்ட ஒரு நபருக்கான ஒரு நாள் ஊதியம் | Eesha Associates, Salem | Sri Anjaneya, Karur | M/s. Durai and Co, Ariyalur |
|---|---|---|---|---|---|---|
| 1 | Supply of 62 people to all public welfare services in all municipal wards | Rs. 1,10,00,000 | Rs. 412.00 | Rs. 437.40 | Rs. 402.74 | Rs. 398.50 |

<u>அலுவலககுறிப்பு</u>

1. மன்றம் பார்வையிட்டு அனுமதிக்கலாம்.
2. மேற்படி நகராட்சி பொதுசுகாதாரப் பணி மேற்கொள்ள தினக்கூலி அடிப்படையில் பணியாளர்கள் சப்ளை செய்ய ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டதில், வரப்பெற்ற மூன்று ஒப்பந்தப்புள்ளிகளில் திரு. Eesha

Associates, Salem அவர்களின் விலைப்புள்ளியில் இதர பிடித்தங்களுக்கான தொகை ஏதும் தெரிவிக்கப்படாததால், மேற்படியாரின் விலைப்புள்ளியை ஏற்க இயலாது.

3. மற்ற இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளில் குறைவான தொகை தெரிவித்துள்ள திரு. **M/s. Durai and Co, Ariyalur** அவர்களின் குறைந்த விலைப்புள்ளியை ஏற்று வேலை உத்தரவு வழங்க மன்றம் அனுமதி வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது.

(கோப்பு எண். 405 / 2018 / எச்1)

**தீர்மானம் – அலுவலககுறிப்பு அனுமதிக்கப்பட்டது**

**<u>தீர்மானம் எண் : 109 / 2018, நாள் : 27.04.2018</u>**

வெள்ளகோவில் நகராட்சி பொது சுகாதாரப் பிரிவில் குப்பைகள் எடுக்கப்பயன்படுத்தும் வாகனங்களின் டயர்கள் தேய்ந்து தற்போது பயன்படுத்த முடியாத காரணத்தால் ஒரிஜனல் டயர்களை மீண்டும் பயன்படுத்தும் வகையில் 2018-19 ஆம் ஆண்டு ரீட்ரேடிங் செய்ய ஆகும் உத்தேச செலவினம் ரூ.50,000/-க்கு நகர்மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

<u>அலுவலககுறிப்பு</u>

1. மன்றம் அனுமதிக்கலாம்.
2. இச்செலவினத்தை பொது நிதியிலிருந்து மேற்கொள்ளவும் ஒப்பந்தப்புள்ளி கோரி பணி மேற்கொள்ளவும் மன்றம் அனுமதிக்கலாம்.

(கோப்பு எண்.768/2018/எச்1)

**தீர்மானம் – அலுவலககுறிப்பு அனுமதிக்கப்பட்டது**

**<u>தீர்மானம் எண் : 110 / 2018, நாள் : 27.04.2018</u>**

வெள்ளகோவில் நகராட்சிக்கு 2018-2019ம் ஆண்டுக்கு பொது சுகாதாரப் பணி உபயோகத்திற்கு தேவையான பீளிச்சிங் பவுடர், பினாயில், சுண்ணாம்புத்தூள் சப்ளை செய்தல் 19.04.2018 அன்று ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டதில், வரப்பெற்ற ஒப்பந்தப்புள்ளிகளின் விபரம் பின்வருமாறு.

| வ.எண். | சப்ளை செய்யும் பொருட்களின் பெயர் | அளவு (கி.கி. / லிட்டர்) | Apex Marketing, 22/B, AG Gass Building, Thindal Medu, Erode | MSP PEST CONTROL SERVICES, 45, 5SENTHAN KANTHAN COMPLEX, Gobichettipalayam |
|---|---|---|---|---|
| 1 | பீளிச்சிங் பவுடர் | 1 கிலோ | ரூ. 38.23 /- | ரூ. 42 /- |
| 2 | பினாயில் | 1 லிட்டர் | ரூ. 50.15 /- | ரூ. 56 /- |
| 3 | சுண்ணாம்புத்தூள் | 1 கிலோ | ரூ. 6.93 /- | ரூ. 8 /- |

மேற்படி வரப்பெற்ற விலைப்புள்ளிகளில் குறைவான விலைப்புள்ளிக தெரிவித்துள்ள **Apex Marketing, 22/B, AG Gass Building,Thindal Medu, Erode** அவர்களின் குறைந்த விலைப்புள்ளியை ஏற்று வேலை உத்தரவு வழங்க மன்றத்திற்கு அனுமதி கோரப்படுகிறது.

**<u>அலுவலககுறிப்பு</u>**

மன்றம் அனுமதி வழங்கலாம்.

(கோப்பு எண். 691 / 2018 / எச்1)

**தீர்மானம் – அலுவலககுறிப்பு அனுமதிக்கப்பட்டது**

**(ஒப்பம்) திரு. இ. ஷாஜஹான்**
**தனி அலுவலர் /**
**ஆணையாளர்**
**வெள்ளகோவில் நகராட்சி**
**திருப்பூர் மாவட்டம்**